# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 239/மா/2025
நாள் 16.03.2026

இரா. பரந்தாமன்,
வாலாஜாபேட்டை. — முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
வேலூர் மாநகராட்சி. — எதிர்மனுதாரர்

வாலாஜாபேட்டை–632513, தென்கடப்பந்தாங்கல் கிராமம், வி.ஐ.பி வாலாஜா ஹைவே சிட்டி லேஅவுட், கதவு எண் 79 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா.பரந்தாமன் என்பவரின் 06.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2025 அன்று பெறப்பட்டு 239/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வாலாஜாபேட்டை–632513, தென்கடப்பந்தாங்கல் கிராமம், வி.ஐ.பி வாலாஜா ஹைவே சிட்டி லேஅவுட், கதவு எண் 79 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா.பரந்தாமன் என்பவர் 06.06.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> “நான் வேலூர் நகராட்சியில் (தற்பொழுது வேலூர் மாநகராட்சி) 4.4.1990 முற்பகல் முதல் 12.4.1990 வரை இளநிலை உதவியாளராகவும் 1.7.2006 முதல் 24.9.2006 வரை உதவியாளராகவும் பணியாற்றியுள்ளேன். அந்த காலத்தில் எனது ஊதியத்தில் மாதம் ரூ.20/– என பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை (Special Provident Fund Subscription) 148 மாதங்கள் முழுவதும் பிடிக்கப்பட்டு அதற்கான அசல், வட்டி தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகையினையும், ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால சேமநல நிதி சந்தாத் தொகை (General Provident Fund Subscription) பிடித்தம் செய்யப்பட்ட தொகைக்கு வட்டித் தொகை வழங்குமாறும் எனது விண்ணப்பங்களின் வாயிலாக ஆணையாளர் வேலூர் மாநகராட்சி அவர்களை கோரப்பட்டது. மேலும் 23.02.2024 தேதியன்று ஆணையர் வேலூர் மாநகராட்சி அவர்களை நேரில் சந்தித்து விண்ணப்பம் அளிக்கப்பட்டது. மேலும் துணை ஆணையர் (நிர்வாகம்) வேலூர் மாநகராட்சி அவர்களையும் உதவி ஆணையர் (நிர்வாகம்) அவர்களையும் நேரில் சந்தித்து மேற்படி தொகைகளை வழங்குமாறு கோரியிருந்தும் இது நாள் வரையில் வழங்கப்படவில்லை. இந்நிலையில் திரு. என். குணாளன் ஆணையர் (ஓய்வு) வடலூர் நகராட்சி அவர்கள் மற்றும் திரு. எஸ். பார்த்தசாரதி ஆணையர் (ஓய்வு) ஆற்காடு நகராட்சி ஆகியோர்கள் வேலூர் நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதிக்கான அசல், வட்டி மற்றும் நிர்வாக பங்குத் தொகை மட்டும் வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு சேம

நல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்பட்டுள்ளது. சிறப்பு இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 3809/ப.பா.2/ நாள் 09.09.2024—ல் சேமநல நிதித் தொகை வழங்கப்படாத நிலையில் ஒய்வு பெற்ற பணியாளர்களால் தொடரப்படும் நீதிமன்ற வழக்குகளை தவிர்க்கும் வகையில் ஒப்பளிப்பு வட்டித் தொகையினை உடனடியாக ஒய்வு பெற்ற பணியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் அதன் பின்னரே தொடர் ஆண்டுகளுக்கான வட்டிப் பிரேரணை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வருங்கால சேமநல நிதி தொகைக்கான வட்டி தொகையும், சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை வட்டித் தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை வழங்க ஆணையர் வேலூர் மாநகராட்சி அவர்களுக்கு ஆவண செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 11.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க. எண் பி4/1334/2024 நாள் 05.08.2025—ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்—

''ஒய்வு பெற்ற ஆணையர் திரு. ஆர். பரந்தாமன் என்பவரின் சிறப்பு சேமநல நிதி தொகை, நிர்வாக பங்களிப்பு தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகை கணக்கிடப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இதற்கான தொகை அன்னாருக்கு ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படும்.

மேலும், சேமநல நிதி தொகைக்கான வட்டித் தொகை கணக்கிடப்பட்டு இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. இருப்பினும், மாநகராட்சி பொது நிதியிலிருந்து நிதி நிலைக்கு ஏற்றவாறு முன்னுரிமை அடிப்படையில் வழங்க பரிசீலனை செய்யப்படும் என இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 20.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

''வேலூர் நகராட்சியில் (தற்போது வேலூர் மாநகராட்சி) 04.04.1990 முதல் 12.04.1990 வரை இளநிலை உதவியாளராகவும், 01.07.2006 முதல் 24.09.2006 வரை உதவியாளராகவும் பணிபுரிந்து வந்த போது எனது ஊதியத்தில் மாதம் ரூ.20/— (Special Provident Fund Subscription) 148 மாதங்கள் முழுவதும் பிடித்தம் செய்யப்பட்டு அதற்கான அசல், வட்டி மற்றும் நிர்வாக பங்கு தொகையுடன் வருங்கால சேமநல நிதி, மற்றும் சந்தாத் தொகை (General Provident Fund Subscription) சேர்த்து வழங்க 23.02.2024ம் தேதி வேலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை நேரில் சந்தித்து எனது விண்ணப்பம் வழங்கப்பட்டது. வருங்கால சேமநல நிதி சந்தா தொகை ஆகியவை இதுவரை எனக்கு வழங்கப்படவில்லை.

ஆனால், எனக்கு சேரவேண்டிய சிறப்பு சேமநல நிதிக்கான அசல் வட்டி மற்றும் நிர்வாக பங்கு தொகை ஆகியவை வழங்கப்பட்டுவிட்டது.

எனவே, சேமநல நிதி சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டி மற்றும் சிறப்பு சேமநல நிதி தொகைக்கான வட்டி ஆகியவற்றை உடனடியாக வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் வேலூர் மாநகராட்சி நிர்வாக அலுவலர் மற்றும் உதவி ஆணையாளர் (பொ) 20.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டிய சேமநல நிதி சந்தா தொகை மனுதாரருக்கு ஒரு வாரத்திற்குள் அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மனுதாராருக்கு அளிக்க வேண்டிய சேமநல நிதி வட்டி தொகை, மனுதாரருக்கு இரண்டு மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மனுதாரர் சிறப்பு சேமநல நிதிக்கான வட்டிக்கு வட்டி வழங்க கோரியுள்ளார். ஆனால் சிறப்பு சேமநல நிதிக்கான வட்டிக்கு வட்டி வழங்க விதிகளில் வழிவகை இல்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வேலூர் மாநகராட்சி நிர்வாக அலுவலர் மற்றும் உதவி ஆணையாளரின் (பொ) வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் முந்தைய வேலூர் நகராட்சியில் (தற்போது வேலூர் மாநகராட்சி) 04.04.1990 முதல் 12.04.2006 வரை இளநிலை உதவியாளராகவும், 01.07.2006 முதல் 24.09.2006 வரை உதவியாளராகவும் பணிபுரிந்து வந்த போது அவரது ஊதியத்தில் மாதம் ரூ.20/– என பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை (SPF Subscription) 148 மாதங்கள் முழுவதும் பிடித்தம் செய்யப்பட்டு அதற்கான அசல், வட்டி மற்றும் நிர்வாக பங்கு தொகை மற்றும் வருங்கால சேமநல நிதி சந்தாத் தொகை (General Provident Fund Subscription) பிடித்தம் செய்யப்பட்ட தொகைக்கு வட்டித் தொகை சேர்த்து வழங்க வேலூர் மாநகராட்சி ஆணையாளருக்கு விண்ணப்பம் அளித்ததற்கு, அவருக்கு சேரவேண்டிய சிறப்பு சேமநல நிதிக்கான அசல் வட்டி மற்றும் நிர்வாக பங்கு தொகை ஆகியவை வழங்கப்பட்டுவிட்டது என்பதும், சேமநல நிதி சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டி மற்றும் சிறப்பு சேமநல நிதி தொகைக்கான வட்டி ஆகியவற்றை உடனடியாக வழங்க வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டிய சேமநல நிதி சந்தா தொகையினை ஒரு வாரத்திற்குள்ளும் மற்றும் சேமநல நிதி வட்டித் தொகையினை இரண்டு மாதத்திற்குள்ளும் மனுதாரருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மனுதாரர் கோரிய சிறப்பு சேமநல நிதிக்கான வட்டிக்கு வட்டி வழங்க விதிகளில் வழிவகை இல்லை என்பதும் எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, நிர்வாக அலுவலர் மற்றும் உதவி ஆணையாளரின் (பொ) வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், முந்தைய வேலூர் நகராட்சியில் (தற்போது வேலூர் மாநகராட்சி) 04.04.1990 முதல் 12.04.2006 வரை இளநிலை உதவியாளராகவும், 01.07.2006 முதல் 24.09.2006 வரை உதவியாளராகவும் பணிபுரிந்து ஒய்வு பெற்ற மனுதாரர் மனுவில் கோரிய சேமநல நிதி சந்தா தொகையினை ஒருவாரத்திற்குள்ளும், அதற்கான வட்டித் தொகையினை இரண்டு மாதத்திற்குள்ளும் மனுதாரருக்கு வழங்கப்படும் என்றும், சிறப்பு சேமநல நிதி தொகைக்கான வட்டிக்கு வட்டி வழங்க விதிகளில் வழிவகையில்லை என்றும் வேலூர் மாநகராட்சி நிர்வாக அலுவலர் மற்றும் உதவி ஆணையாளரின் (பொ) வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரருக்கு சேர வேண்டிய தொகையினை விதிகளுக்குட்பட்டு வழங்க விரைந்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. இரா.பரந்தாமன்,
கதவு எண் 79,
வி.ஐ.பி வாலாஜா ஹைவே சிட்டி லேஅவுட்,
தென்கடப்பந்தாங்கல் கிராமம்,
வாலாஜாபேட்டை– 632513.

(2) ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்–632 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.